# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 08–ஆம் தேதி நாள்:08.11.2023 புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சாதாரண கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் அக்டோபர்–2023 மாதத்திற்கு பிறப்பு–29 மற்றும் இறப்பு –14 பதிவுகள் ஆக மொத்தம் பதிவுகள் 43 இந்நகராட்சியில் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு:__ மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2361/2023/எச்1 | தீர்மான எண்-1038<br>நாள்.08.11.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-2 | வரிவசூல் மார்ச்-2023 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வரிவசூல் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டங்களில் இந்நகராட்சி வரிவசூலில் மிகவும் பின்தங்கியுள்ளதாலும், வரிவசூல் தொடர்பாக வரிவிதிப்பாளர்களிடம் இருந்து வரிவசூல் செய்திடவும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.<br>இதன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை ஆட்டோவுடன் கூடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து வரிவசூல் செய்திடவும் 30.10.2023 முதல் 08.11.2023 வரை ஆகும் இதர செலவினங்களுக்கும், குறுகிய கால விலைப்புள்ளிகள் கோரி அறிவுப்பு வழங்கி பணியினை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினம் ரூ.50,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக்குறிப்பு:__ அவசரம் அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2347/2023/அ1. | தீர்மான எண்-1039<br>நாள்.08.11.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-3 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வருகின்ற தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு தற்காலிக விழா கால கடைகள் அமைக்கப்பட்டு நடத்தி வருகின்றனர், நகராட்சியின் வருவாய் நிதியினை கருத்தில் கொண்டு தீபாவளி பண்டிகை காலம் முடியும் வரை நகராட்சி பணியாளர்களைக் கொண்டு தினசரி வசூல் செய்திட விலைப்புள்ளிகள் பெற்று டோக்கன்கள் அச்சடித்து வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-த்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றப்பொருள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவகக்குறிப்பு:__ நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 191/2023/A.1 | தீர்மான எண்-1040<br>நாள்.08.11.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவு பொதுநிதியில் 2023-24ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த ஒப்பந்ததாரர் தேர்வு செய்திட மூன்று ஆண்டுகளுக்கு மறு ஒப்பந்தபுள்ளி குறித்து தினசரி செய்திதாளில் 13.04.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதற்குண்டான பட்டியல் தொகை ரூ.59,745/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதிப்பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 1822/2023/எச்1 | தீர்மான எண்-1041<br>நாள்.08.11.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-5 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பருவ மழைகாலம் ஆரம்பித்துவிட்டதாலும், டெங்கு உள்ளிட்ட காய்ச்சல்கள் பரவிவருவதாலும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை செய்த பின்பு பிளிச்சிங்பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புதூள் போன்ற கிரிமிநானிகள் பயன்படுத்த வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதியும் சுற்றுச்சூழல் நலன் கருதியும் அதற்காகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.2.00இலட்சம்-ஐ நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 01938/2022/எச்1 | தீர்மான எண்-1042<br>நாள்.08.11.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-6 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–09 கோவில்பத்து 30000 லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பழுதடைந்த நிலையில் உள்ளதால் அப்பகுதி பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்திட கோரி பொது மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று நகராட்சி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரையின் படி 30000 லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் புதிய சிறுமின் விசைப்பம்பு அமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் :2528/2023/இ1 | தீர்மான எண்-1043<br>நாள்.08.11.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

நாள்: 04-11-2023
இடம்: சீர்காழி

நகர்மன்ற தலைவர்
சீர்காழி நகராட்சி